# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE TRINCOMALEE TOWN & GRAVETS DIVISIONAL SECRETARIAT DIVISION

By

MR. SAMPASIVAM NAVEENDRADAS

INDEX NO: MS 52

A dissertation submitted to the Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment of the requirements of the Bachelor of Business Adminstration (B.B.A).

DEPARTMENT OF MANAGEMENT

FACULTY OF COMMERCE AND MANAGEMENT

EASTERN UNIVERSITY, SRI LANKA

1996.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் | - 01 | அறிமுகம் | 01 - 07 |
| அத்தியாயம் | - 02 | நூலாய்வு | 08 - 25 |
| அத்தியாயம் | - 03 | பிரதேச செயலக பிரிவு பற்றிய அறிமுகம் | 26 - 36 |
| அத்தியாயம் | - 04 | விவசாயம் | 37 - 49 |
| அத்தியாயம் | - 05 | கல்வி | 50 - 61 |
| அத்தியாயம் | - 06 | மீன்பிடி | 62 - 69 |
| அத்தியாயம் | - 07 | சுகாதாரம் | 70 - 79 |
| அத்தியாயம் | - 08 | வீடமைப்பு | 80 - 86 |
| அத்தியாயம் | - 09 | சுயதொழில் | 87 - 91 |
| அத்தியாயம் | - 10 | சிறுகைத்தொழில் | 92 - 98 |
| அத்தியாயம் | - 11 | கூட்டுறவு | 99 - 105 |
| அத்தியாயம் | - 12 | புனர்வாழ்வு | 106- 113 |
| அத்தியாயம் | - 13 | புனரமைப்பு | 114- 122 |
| அத்தியாளம் | - 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 123- 129 |

| | | |
|---|---|---|
| பின்னிணைப்பு : | அட்டவணைகள், வரைபடங்கள் | 130- 136 |
| உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்பும் | | 137- 140 |

# நிறைவேற்றுச் சுருக்கம்

கிராமங்களை நான்கு அடங்கும் பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தர விருத்தியை பிரதான நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வில் பல கட்டங்களில் காணப்படும் பலம், பலவீனம், சந்தர்ப்பம் அச்சுறுத்தல் போன்றவற்றை இனம் கண்டு செயல்திட்டங்களுடன் நடத்தைக்கான தீர்வுகளை முன்வைப்பதன் மூலமும் இவ்வாய்வு சிறப்பாக நடைமுறைப்படலாம் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரை நெல் பிரதான நோக்கமாகக் காணப்படுவது உள்ளூர் மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியவாறு உற்பத்தியை அதிகரிப்பதாகும். எனினும் கடந்த கால மக்கள் பட்டறிந்த இன்று பல்வேறு குறைகள் காணப்படுவதுடன் நீர்ப்பாசனத் திட்டங்கள் பல புனரமைக்கப்படாமலும் உள்ளன. போதியளவு நீர்ப்பாசன வசதிகள் காணப்படாமை பிரதானமாகக் காணப்படுகின்றது.

கல்வியை நோக்கும்போது இப்பிரிவு முழுவதும் கல்வி மட்டம் பிரிவுக்குள்ளே உட்கட்டமைப்புக் குறைபாடுகள் காணப்படுகின்றன. பிரதேசத்தின் நிலை விருத்தி வளர்ச்சி அடைந்த நிலைக்குக் கொண்டுவருதல் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றபோதும் ஏனைய பல்வேறான பாடசாலை நோக்கிய மாணவர்களின் இடம்பெயர்தல் வரவு, கல்வி வசதிகளில் போதிய வளர்ச்சியின்மை என்பன காணப்படுகின்றன.

மீன்பிடியை நோக்கும்போது கடல் ஏரிகளாக இப்பிரிவு காணப்படுவது பெரியதொரு பலமாகக் காணப்படுகின்றது. தேவையான பழைய முறைகளைப் பயன்படுத்தல், நிதிநிலைகளின் குறைவு என்பன முக்கிய பலவீனமாகக் காணப்படுகின்றன. இதன் முக்கிய நோக்கம் உள்ளூர் தேவைப் பூர்த்தி மட்டுமல்லாது வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்தல் அதிகரிக்கப்பட வேண்டும்.

மீள் பாதுகாப்பிற்கான ஒதுக்கீட்டுக் காணிகள் பெறப்பட வேண்டும் என்பன காணப்படுகின்றன.

சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வைத்திய வசதிக் காக வெளிமாவட்டங்களுக்குச் செல்வதால் சலிக்கப்படுவதுடன் அவர்கள் அன்றாட வாழ்வில் சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதைக் குறைதல் என்பன பிரதான நெருக்கடிகளாகக் காணப்படுகின்றன. மேலும் போதிய வைத்தியசாலை இன்மை, வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் பற்றாக் குறை போன்றன முக்கிய பலவீனங்களாகக் காணப்படுகின்றன.

வீடமைப்பு இப்பிரிவில் துரிதமாக்கப்பட வேண்டிய ஒரு துறை யாகும். ஏனெனில் பிற பிரதேச மக்களும் இப்பிரிவில் இடம்பெயர்ந்து ள்ளதும் அரசாங்க திணைக்களங்கள் இப்பிரிவில் குடியமைவில் காணப்படுவது மாகும். காணி நிலங்களுக்கு நகரப் பகுதியில் தட்டுப்பாடு காணப் படுவது முக்கிய பலவீனமாகும். வீடமைப்பிற்கான நிதி பெற்றுக்கொள்ளக் கூடியது ஓர் பலமாகும்.

புனர்வாழ்வு என்பது கூடுதலாக வேண்டப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் மக்கள் மீளக்குடியமர்த்தலும் அவர்களை புதிய வாழ்க்கைக்கு தயார்படுத்தலும் ஆகும். இதற்கான பிரதான பலவீன மாக மக்களைச் சென்றடையாத ஒழுங்கீனமான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை காணப்படுகின்றது. அத்துடன் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள அரச தாபனங்களுடன் அரசசார்பற்ற தாபனங் களும் காணப்படுதல் முக்கிய பலமாகும்.

புனர் நிர்மாணம் இப்பிரிவில் எல்லாத் துறைகளிலும் வேண்டப் படுகின்றது. இதில் குறிப்பாக பாதிக்கப்பட்டோர், வலுவிழந்தோர் உடல் ஊனமுற்றோர் தொடர்பாக அவர்களைப் புதிய வாழ்க்கைக்கு ஊக்குவிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பது முக்கிய குறிக்கோளாகும். உண்மையான தரவுகளைப் பெற முடியாமை, சேவைகள் உரியவர்களைச் சென்றடையாமை போன்றன முக்கிய பல வீனங்களாகும்.

சுயதொழிலில் ஓர் அபிவிருத்தியினை ஏற்படுத்துவது என்பது இப் பிரிவுக்கு மிகவும் அவசியமாகின்றது. ஏனெனில் தொழில்வாய்ப்பு அற்றோர் தொகை தொடர்ந்து அதிகரித்துச் செல்வது காணக்கூடியதாக உள்ளது. படித்த இளைஞர் யுவதிகள் இதில் நாட்டம் கொள்ளாமை என்பது பலவீனமாகக் காணப்படுவதுடன் சுயதொழில் வாய்ப்புக்களை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்களும் அரச சிறுகைத்தொழில் அமைச்சும் தயாராக உள்ளது ஓர் பலமாகும்.

சிறுகைத்தொழில் துறையைப் பொறுத்தளவில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தலும் தனி வருமான உயர்வும் என்பது பிரதான நோக்கம் என்றும் சந்தை வாய்ப்புக்களை பெறுவதில் உள்ள சிரமங்களும் ஒழுங்கான ஒன்றிணைப்பு இன்மை காணப்படுதலும் பிரதான பலவீனங்களாகும். அத்துடன் சிறுகைத்தொழிலுக்கான கடன்களைப் பெற்றுக்கொள்ள வங்கி வசதிகள் தாராளமாகக் காணப்படுதல் ஓர் பலமாகும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் மக்களை கூட்டுறவுடன் இணைத்தலும் அதன் சேவைகளை விஸ்தரிப்படுத்தலும் பிரதான நோக்கமாகும். கூட்டுறவுத்துறை தொடர்பாக மக்கள் போதிய விளக்கங்களை பெற்றுக்கொள்ளாமையும் நிதி மோசடி காணப்படுவதும் பிரதான பலவீனங்களாகும். கூட்டுறவுத்துறை விருத்திக்கான கூட்டுறவு அமைப்புக்கள் பல காணப்படுதல் முக்கிய பலமாகும்.

மேற்கூறப்பட்ட துறைகளில் ஓர் ஒழுங்கான திட்டமிட்ட மக்கள் வாழ்க்கைத்தர விருத்திக்கான ஓர் அபிவிருத்தித்திட்டமிடலை மேற்கொள்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். இவ் ஆய்வின் வெற்றி அதனை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.